1981 ஏப்ரல் 6]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, நாம் அரை மணி நேரம் கூடத் தாங்க முடியாத அரசு என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நாம் அவ்வளவு பலவீனம் உடையவர்கள் அல்ல. மக்களின் ஆதரவு இருக்கும் வரை அரை மணிநேரம் அல்ல, 50 ஆண்டுகள் வரை கூட நாம் ஆட்சிக்கு வர முடியும். ஆகவே உதுபற்றி நினைக்கவேண்டாம். இபபோது கர்நாடக அரசு மாறி மாறி கருத்து தெரிவிக்கின்ற நிலைமையில் நாமே மத்திய அரசை மீண்டும் வற்புறுத்தி ஏற்பாடு செய்யவேண்டும். 80 மார்ச்சில் கர்நாடக அரசு ஒப்புக்கெண்டது. இப்போது மாறுகின்ற நிலை இருக்கிறது என்றால் நாமே அந்த அணையைக் கட்டிக் கொள்வதற்குரிய வகையில் மமதிய அரசோடு வாதாடி போராடி அனுமதி பெறுவதற்குரிய வகையில் அரசு என்ன முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கவேண்டியவர்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். கொடுக்க வேண்டியவர்கள் இன்னும் கொடுக்கவில்லை.

சூரிய ஒளியிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டம்.

*வினா எண். 651—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பரிசோதனை தமிழகத்தில் நடைபெற்றதா ?

(ஆ) ஆம் எனில் பரிசோதனையின் முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) பெல் நிறுவனம் சூரிய வெப்பத்தில் இயங்கும் ஜெனரேட்டர் அமைப்பினை உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இத் திட்டம் ஆராய்ச்சி நிலையில் உள்ளது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தைத் தயாரித்து பயன்படுத்துவதற்கான சாதனங்களையும், கருவிகளையும் மின் வாரியமே, குறைந்த விலையில் மக்களுக்கு வழங்க முன்வருமா ? அதேபோல் அண்மையில் கட்டப்பட இருக்கின்ற மின் வாரியத்தின் பல மாடிக் கட்டிடத்தின் முழு மின்சாரத் தேவையையும் சூரிய ஒளியின் மூலமே பெறுவதற்குரிய வகையில் பரிசோதனையாக முயற்சி மேற்கொள்ளப்படுமா ?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, சூரிய வெப்பத்திலே இருந்து மின்சாரம் பெறுவது என்பது ஆய்வுக்கட்டத்திலேதான் இருக்கின்றதே தவிர வணிக ரீதியாக இன்னும் செயல்படவில்லை. மேலும் அண்மையிலே கட்டப்பட இருக்கின்ற மின் வாரியத்தின் பல மாடிக் கட்டிடத்தில் சூரிய வெப்பத்தின் மூலம் மின்சாரத்தைப் பெற்றுப் பயன்படுத்துவதற்குரிய ஒரு திட்டம் இருந்தது. ஆனால் அதற்கு ஏராளமாக செலவு பிடிக்கும் என்று அரசு கருதுகிறது. ஆகவே அதுபற்றி மறுபரிசீலனை செய்து வருகின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் பெறுவது ஆய்விலே இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் ஜப்பான் நாட்டிலே சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் பெற்று பல தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. ஆகவே மின் வாரியம் இதிலே தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் சொன்னது பல இடங்களிலே அது பரீட்சார்த்தமாக இயக்கப்பட்டு வருகின்றது என்பதுதான். ஆகவே இது ஜப்பான் நாட்டிலே மட்டுமல்ல, அமெரிக்காவிலேயும் அவ்வாறு சோதனை முறையில் செய்யப்பட்டு வருகின்றது. நம்முடைய நாட்டிலேயும் சூரிய வெப்பத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றி நம்முடைய விஞ்ஞானத் தொழில் கூடங்களும் ஆய்ந்து வருகின்றன. ஆகவே இது இயலாது என்பது அல்ல. அதற்கு எவ்வளவு செலவு பிடிக்கும் என்பது தான் பிரச்சினை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் பட்ட மேற் படிப்பு.

*வினா எண். 652—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியப் பட்ட மேற் படிப்பு தரம் குறைந்ததென்று கேரளப் பல்கலைக் கழகம் கூறியுள்ள குற்றச்சாட்டு பற்றி அரசு என்ன நடவடிக்கை மேற் கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கேரளப் பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் 1979-80 பி.எட். பட்டத்தை மீண்டும் அங்கீகரித்துள்ளது என்றும், இந்தப் பட்டத்திற்கு உரிய அங்கீகாரத்தை நிலையாக அளிக்க கேரளப்